# புலவர் என். இ. இராமலிங்கம் அவர்களின் திருக்குறள் பணிகள்

**பேராசிரியர் முனைவர் கு. மோகனராசு**

44

**பிறப்பும் கல்வியும்:**

'பண்புடையார் பட்டுண்டு உலகம்' என்பது திருவள்ளுவர் வாய்மொழி. அத்தகைய பண்பமிகு பெரியவர் திருவாசகச் செம்மல் ஏழுமலை – பாப்பாத்தி அம்மையார் ஆகியோரின் அன்பு மகனாக 1931 ஏப்பிரல் திங்கள் 37ஆம் நாள் காஞ்சிபுரம் மாவட்டம்இ நந்திபுரம் கிராமத்தில் பிறந்தவர் திருக்குறள் மாமணி என். இ. இராமலிங்கம் அவர்கள். நந்திபுரம் கிராமத்தில் உள்ள தொடக்கப் பள்ளியில் தம் பள்ளிப் படிப்பைத் தொடங்கினார்: அந்தக் கிராமத்தில் மணியம் திரு. இராமசாமி அவர்களிடம் பள்ளிப் பாடத்துடன் திருக்குறள் மனப்பாடம் செய்து கற்கும் வாய்ப்பைப் பெற்றார்.

1946 ஏப்பிரல் 13ஆம் நான் சைதையில் ஒளியகம் ந.ரா. ஆடலரசு அவர்களின் பெருமுயற்சியால் தொடங்கப்பட்ட 'திருவள்ளுவர் செந்தமிழ்ச்சிவநெறிக் கழகம்' சார்பில் திருவள்ளுவரகம் , ராமநாத அடிகளார் அவர்களால் நடத்தப் பெற்ற திருக்குறள் வகுப்புகளுக்கு வாரந்தோறும் தொடர்ந்து சென்று கேட்கும் வாய்ப்பினைப் பெற்றார்.

பள்ளி , றுதியாண்டுக்குப் பின், சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து இளம் வணிகவியல் (பி.காம்) பட்டம் பெற்றார். கல்லூரியில் படித்த காலத்தில் தந்தை பெரியார் அவர்கள் வட சென்னையில் நடத்திய திருக்குறள் மாநாட்டில் (1949 சனவரி 15, 16) கலந்து கொண்டு கேட்கும் வாய்ப்பினைப் பெற்றார்.

இவர், 1954ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள், இரயில்வே துறையில் கணக்குப் பிரிவில் சேர்ந்து சிறப்பாகப் பணியாற்றி, 1989 ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில் ஓய்வு பெற்றார்.

தென்னக இரயில்வே கணக்குப் பிரிவில் தாம் பணியாற்றிய போது, இரயில்வே முத்தமிழ் மன்றம் சார்பில், வித்துவான் க.வா. சச்சிதானந்தம் அவர்கள் அருமுயற்சியால், மகாவித்துவான் மே.வீ. வேணுகோபால் அவர்களைக் கொண்டு தொடங்கப் பெற்ற வகுப்பில் சேர்ந்து, 1976-இல் புலவர் பட்டமும், 1978-இல் இளம் இலக்கியவியல் (பி.லிட்) பட்டமும் 1984ஆம் ஆண்டு தமிழ் முதுகலை (எம்.ஏ) பட்டமும் பெற்றார்.

**திருக்குறள் வகுப்புகள்:**

புலவர் பட்டம் பெற்ற பின்னர், ஏதாவதொரு வகையில், இயன்ற அளவிற்குத் தொண்டு செய்ய வேண்டும் என எண்ணினார். தழிழ்ச் சான்றோர்கள் மற்றும் சிந்தனையாளர்களின் அரிய செயல்களை எல்லாம் மனத்துள் கொண்டு மக்களிடையே திருக்குறள் நெறி பரப்புதல் நலம் பயக்கும் எனத் தேர்ந்தார்.

சென்னையில் வேறெங்கும் திருக்குறள் வகுப்புகள் நடை பெறாத காலகட்டத்தில் 1981ஆம் ஆண்டு மேத் திங்களில்இ தாம் பணியாற்றிக் கொண்டிருந்த இரயில்வே தலைமை அலுவலகத்தில்இ இரயில்வே



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

முத்தமிழ் மன்றத்தின் சார்பில் திருக்குறள் வகுப்புகளைத் தொடங்கினார். இந்த வகுப்புகள் 1988 மேத் திங்கள் வரை ஏழாண்டுகள் நடைபெற்றன. நடத்திய வகுப்புகள் 252.

1988 – 1990 ஆம் அண்டுகளில் திருநின்றவூர் அருள்மிகு இலட்சுமி விநாயகர் திருக்கோயிலில் சனிக்கிழமை தோறும் திருக்குறள் வகுப்புகளும் தொடர் சொற் பொழிவுகளும் நடத்தினார். இங்கு மொத்தம் 50 நிகழ்வுகள் நடைபெற்றன.

ஆதம்பாக்கம் அருள்மிகு சுந்தர விநாயகர் திருக்கோயிலில் 1991ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் வாரந்தோறும் திருக்குறள் வகுப்புகள் நடத்தியுள்ளார். நடத்திய வகுப்புகள் 172.

சென்னை மல்லீஸ்வரர் திருக்கோயிலில் சில திங்கள்கள் திருக்குறள் வகுப்புகள் நடத்தியுள்ளார்.

ஆதம்பாக்கம் திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் 2000 – 2002 ஆம் ஆண்டுகளில் தாம் வசிக்கும் இலாயிட்ச அவென்யூ பகுதியில் 50 திருக்குறள் வகுப்புகள் ஃ சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். இவையே அல்லாமல்இ தொடர்ந்து ஆங்காங்கே சுமார் 50 திருக்குறள் வகுப்புகள் ஃ சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். மொத்தத்தில் தாம் ஒருவரேஇ 21 ஆண்டுகள்இ சுமார் 600 திருக்குறள் வகுப்புகள் நடத்தித் திருக்குறள் விழிப்புணர்வை ஆங்காங்கே உருவாக்கம் செய்துள்ளார் என அறிய முடிகின்றது.

1995ஆம் ஆண்டுஇ சிங்கப்பூரில் நடைபெற்ற திருமுறை மாநாட்டில் பங்கேற்றுச் சிறப்பரையாற்றியுள்ளார். அங்கு இலக்கிய வட்டத்தின் சார்பில் ‘திருவள்ளுவரின் மேலாண்மைக் கோட்பாடுகள்’ என்னும் பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றியுள்ளார்.

இலவய வெளியீடுகள்:

தாம் திருக்குறள் வகுப்புகள் நடத்தும் போது, ஆங்காங்கே சிறிய அளவில் சில இலவய வெளியீடுகள் வெளியிட்டுஇ வகுப்பிற்கு வருகை தந்த அனைவருக்கும் ஆங்காங்கே வழங்கியுள்ளார். அவ்வாறு வழங்கிய இலவய வெளியீடுகள் வருமாறு: 1. ஈதல் இசைபட வாழ்தல்; 2. ஒன்றாக நல்லது கொல்லாமை; 3. ஒருபொழுதும் வாழ்வது அறியார்; 4. திருக்குறள் அகவல்; 5. உங்கள் சிந்தனைக்கு.

இல்லத்தில் நடைபெற்ற திருமணம் மற்றும் புதுமனை விழா போன்ற நிகழ்வுகளில் பின்வரும் பயன்மிகு வெளியீடுகளை இலவயமாக வழங்கியுள்ளார்.

1.அன்பும் அருளும்; 2. வாய்மையும் தூய்மையும் ; 3. சுற்றமாச் சுற்றும் உலகு; 4. திருமணத் திருநாள் (கவிதை) ; 5. திருவள்ளுவர் காட்டும் உடைமைகள்.

100ஆவது திருக்குறள் வகுப்புகள் நிறைவு விழாவின்போது வகுப்பிற்கு வருகை தந்த அனைவருக்கும் சிறிய அளவிலான திருவள்ளுவர் திருவுருவச் சிலையை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். 125 திருக்குறள் தெளிவரை நூல்களும் வாங்கி வழங்கியுள்ளார். திருக்குறள் வகுப்புகள் நடைபெறும் போதுஇ அனைவரும் திருக்குறள் சிந்தனையில் ஈடுபட வேண்டும் என்னும் நோக்கில் வருகை தந்தோர்க்குக் குறிப்பேடுகளும் வாங்கி வழங்கியுள்ளார்.

வி.ஜி.பி. நிறுவனத் தலைவர் டாக்டர் வி.ஜி. சந்தோசம் அவர்கள்இ சிறந்த எழுத்தாளர்க்கென வழங்கிய பரிசுத் தொகை ரூபாய் ஆயிரத்தில் 75 மேலாடைகள் வாங்கி, அவற்றைத் திருக்குறள் வகுப்புகளுக்குத் தொடர்ந்து வந்தவர்களுக்குப் போர்த்திச் சிறப்பித்துள்ளார்.

திருக்குறள் முற்றோதல் நிகழ்வுள்:

1984ஆம் அண்டு முதல் தாம் ஓய்வு பெறும் வரை சனவரித் திங்கள் முதல் நாள் அன்றுஇ திருக்குறள் முற்றோதல் நிகழ்வுகளை நடத்தியுள்ளார். இந்த நிகழ்வுகளில் வள்ளுவர் வழி கல்லை தே. கண்ணன், பெரும்புலவர் திருஞானசம்பந்தர்; செந்தமிழ்ச் செம்மல் புலவர் இராசகோபாலன் முதலானோர் பங்கு பெற்றுள்ளனர்.

**இல்லமும் பதிப்பகமும்:**

;இவர் தம் இல்லத்திற்குத் 'திருவள்ளுவர் இல்லம்' எனப் பெயர் வைத்தள்ளார்; தாம் நூல்கள் வெளியிடத் தொடங்கிய பதிப்பகத்திற்குத் 'திருவள்ளுவர் பதிப்பகம்' என்றே பெயர் வைத்துள்ளதைக் காண முடிகின்றது.

**நூல் வெளியீடுகள்:**

தாம் நிறுவியதிருவள்ளுவர் பதிப் பகத்தின் வழி முதன்முதலாக 1989 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில்இ'இறைமையும் முறைமையும்' என்னும் நூலை வெளியிட்டார்; இது தான் அவர் வெளியிட்ட முதல் நூலுமாகும்; ஓய்வு பெற்றபின் வெளிவந்த முதல் நூலும் ஆகும். அதன் பின்னர்இ ஆண்டுக்கு ஒரு நூல் எனத் திட்டமிட்டு கடந்த 22 ஆண்டுகளாக நூல்கள் வெளியிட்டு வருகின்றார். அவற்றுள் திருக்குறள் தொடர்பான நூல்கள் 12; வரலாற்று நூல்கள் 7; இலக்கியம் தொடர்பான நூல்கள் 2; கவிதை நூல்கள் 2; பயணநூல் ஒன்று.

**திருக்குறள் நூல்கள் பெற்ற சிறப்புகள்:**

முதன்முதல் வெளிவந்த 'இறைமையும் முறைமையும்' என்னும் நூல், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் முதல் பரிசைப் பெற்றது (1991); 'செயற்கரிய செய்வார் பெரியர்' (1993),'திருவள்ளுவரின் செயல் நெறிக்கோட்பாடுகள்' (2000) என்னும் நூல்கள் இரண்டாம் பரிசுகளைப் பெற்றுள்ளன.

'இறைமையும் முறைமையும்' என்னும் நூலுக்குஇ வி.ஜி.பி. நிறுவனம் தமிழ் எழுத்தாளர்களுக்கான சிறப்பு விருது வழங்கிஇரூபாய் 1000 பரிசாகவம் வழங்கியுள்ளது.

இவர் தம் நூல்களை மதிப்பீடு செய்த – அணிந்துரை வழங்கிய சான்றோர்கள் பலரும் ஓர் ஆய்வாளருக்குரிய தகுதிகளோடு இவர் நூல்களை வழங்கியுள்ளதாகப் பாராட்டியுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். சான்றாகஇ'இனிய காண்போம்' என்னும் நூலுக்கான அணிந்துரையில் 'இந்நூல் முனைவர் பட்ட ஆய்வேட்டிற்குரிய அனைத்துச் சிறப்புகளையும் பெற்றிருக்கிறது' எனச் சிலம் பொலி சு. செல்லப்பனார் அவர்கள் கூறியிருப்பதைக் கொள்ளலாம்.

**திருவள்ளுவர் கழகம்:**

தம் இல்லத்தில் திருவள்ளுவர் பெயரால் ஓர் அமைப்பை 1993இல் நிறுவியுள்ளார். இந்தக் கழகத்தின் வழி ஆண்டு தோறும் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடி வருகிறார்; மாணவர்களுக்குப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கி வருகிறார்; இக்கழகத்தின் சார்பில்இ திருக்குறள் சார்ந்த பல இலவய வெளியீடுகளும் வெளியிட்டுள்ளார்.

பெற்றுள்ள விருதுகள்:

திருக்குறளுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் பெரும் அளவில் தொண்டாற்றியுள்ள இவருக்குத் தமிழ் அமைப்புகளும் திருக்குறள் அமைப்புகளும் பல விருதுகள் வாங்கிச் சிறப்பித்துள்ளன. அவற்றுள் திருக்குறள் தொடர்பாக இவர் பெற்றுள்ள விருதுகள் வருமாறு:

1. திருக்குறள் சீர் பரவுவார் - வள்ளுவர் வழி வாசகர் வட்டம்
2. திருக்குறள் நெறித் தோன்றல் - திருக்குறள் நெறி பரப்பும் மையம்
3. வள்ளுவ மாமணி - இரயில்வே முத்தமிழ் மன்றம்
4. குறள் பயிற்றுச் செம்மல் - உலகத் திருக்குறள் மையம்
5. பொதுமறைச் செம்மல் - திருக்குறள் பீடம்இ மதுராந்தகம்
6. திருக்குறள் ஞாயிறு - திருக்குறள் இயக்கம்இ வில்லிவாக்கம்
7. திருக்குறள் பண்பாட்டுச் சிற்பி – உலகத் திருக்குறள் மையம்
8. திருக்குறள் மாமணி – திருவள்ளுவர் இலக்கிய மன்றம்இ சென்னை

இவ்விருதுகள் நாடிச் சென்று பெற்றவை அல்ல; தேடி வந்த விருதுகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**நிறைவுரை:**

தமிழ்த் துறைப் பேராசிரியராக இல்லாதுஇ இரயில்வெ துறையில் பணியாற்றிய ஒருவர் திருக்குறளுக்குத் தரமான பல நூல்களைப் படைத்து, கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் இருக்கும் பேராசிரியப் பெரு மக்களைவிடத் திருக்குறளுக்குத் தொண்டாற்றியுள்ளதுஇ திருக்குறள் வளர்ச்சி வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும் என்பது உறுதி.

திருக்குறள் வகுப்புகள் நடத்தித் திருக்குறள் எழுச்சியை உருவாக்கம் செய்தமைஇ பல நோக்குகளில் திருக்குறள் நூல்கள் வழங்கியமை என்னும் இரண்டு நிலைகளிலும் திருக்குறள் வளர்ச்சி வரலாற்றில் இவர் நிலைத்து நிற்கும் தகுதிக்கு உரியவர் ஆகின்றார் எனத் துணிந்து கூறலாம்.

திருக்குறள் வகுப்புகளுக்கு வருவார்க்கு எல்லாம்இ பயன்படும் வகையில்பல இலவய வெளியீடுகள் அச்சடித்து வழங்கியமை இவர் நம் திருக்குறள் பணிகளில் தனிச்சிறப்பிற்கு உரியதாக அமைகின்றது.(வாழும் வள்ளுவம் மே 2011).